வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்கள் கேட்ட அந்த சமுதாயக் கூடம் பற்றி வாரியத்தினிடம் ஆலோசனை செய்து, உரிய முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

பகுதிநேர நியாய விலைக் கடை

***45144—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, கார்மாங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 370 குடும்ப அட்டைகளையும் சேர்த்து, 715 குடும்ப அட்டைகளுடன் கார்மாங்குடி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும்பட்சத்தில், தாய்க் கடையில் 345 குடும்ப அட்டைகள்

மட்டுமே இருக்கும். இரண்டு கடைகளுக்கும் இடைப்பட்ட தூரம் ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவாகவே இருக்கும். குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டபின், தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும், இரு கடைகளுக்குமிடையே குறைந்தது 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலை எழும். எனவே, கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.*

திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நியாய விலைக் கடைகளைப் பிரிப்பதற்கான விதிகளின்படி, கார்மாங்குடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்துள்ளார். புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், கார்மாங்குடி கிராமம், கம்மாபுரம்-கருவேப்பிலங்குறிச்சி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கிராமம் ஆகும். இக்கிராமத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடையில் சுமார் 715 குடும்ப அட்டைதாரர்கள் பொருட்கள் வாங்கி பயனடைந்து வருகின்றனர். இதில், 370 குடும்ப அட்டைதாரர்கள், ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலிருந்து நெடுஞ்சாலை வழியாக சுமார் 1 கிலோ மீட்டர் நடந்து சென்று பொருட்களை வாங்க வேண்டிய ஒரு நிலை உள்ளது. இது அந்தப் பகுதி மக்களுக்கு, குறிப்பாக முதியவர்களுக்கு பெரும் சிரமமாக உள்ளது. அதுமட்டுமல்லாமல், நெடுஞ்சாலை வழியாக நடந்து செல்ல வேண்டிய நிலை இருப்பதால், சிறு விபத்துகள் ஏற்படுகிற ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களது முடிவினை மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதியிலே பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்களின் இந்தக் கேள்வி நேற்றைக்கே என்னிடம் வந்தது. உடனே துறையின் மாவட்ட அலுவலரிடம் நான் கேட்டபோது, அவர், 'கார்மாங்குடி கிராமத்தின் முன்பகுதியிலேயே நியாய விலைக் கடை இருக்கிறது. அந்த ஊரைத் தாண்டி ஆதி திராவிடர் காலனி பகுதி அமைந்திருக்கிறது. இரு பகுதிகளுக்கும் இடையே தற்போது இடம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இடைப்பட்ட தூரம் 1 கிலோ மீட்டருக்கும் குறைவாக இருப்பதால், இரு பகுதிகளிலும் உள்ள மக்கள் தங்குதடையின்றி பொருட்கள் வாங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இடம் கேட்டிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மாண்புமிகு உறுப்பினரும் எடுத்துரைத்து, அவரது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணத்தைக் கொடுத்தால் இரண்டு பகுதியினருமே பயனடையும் வகையில் புதியதாக ஒரு நியாய விலைக் கடையை அங்கேயே அமைத்துவிடலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வந்தபிறகு 673 முழுநேர கடைகள், 1,722 பகுதிநேர கடைகள் ஆக மொத்தம் 2,395 கடைகள் திறக்கப்பட்டுள்ளன என்பது உங்களுக்கும் தெரியும். அதுபோக, 46 நகரும் நியாய விலைக் கடைகளும் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அரசைப் பொறுத்தவரையில், அரசு வழங்குகின்ற நியாய விலைப் பொருட்கள் தங்குதடையின்றி அந்தப் பகுதி மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்பதில் எந்தவித கருத்து மாறுபாடும் இல்லை. இதில், எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற நிலையெல்லாம் இல்லை. இருந்தபோதிலும், பகுதிநேரக் கடைகளை அதிகப்படுத்திக் கொண்டே போகும்போது பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. கடை ஆய்வு உள்ளிட்ட பல்வேறு பணிகள் உள்ளன என்பது உங்களுக்கே தெரியும். பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் பகுதியின் இடைப்பட்ட தூரம் 1 கிலோ மீட்டருக்கும் குறைவாக இருக்கிறது. எனவே, இரு பகுதிகளுக்கும் மத்தியில் புதிய நியாய விலைக் கடை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, நீங்களும்

முயற்சி எடுத்து, நிதியை வழங்கினால், நாங்களும் முயற்சி எடுத்து புதிய கடையை உடனடியாகக் கட்டிவிடலாம். ஒரே இடத்தில் இரு பகுதியினருமே வந்து பொருட்களை வாங்கிச் செல்லும் நிலையை உருவாக்கலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஆலோசனை கூறி அமர்கின்றேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நாங்கள் ஒரு சில கடைகளுக்குத்தான் அதுபோல நிதி ஒதுக்க முடியும். ஏனென்றால், தற்போது புவனகிரி தொகுதி, சேத்தியாத்தோப்பு பேரூராட்சியில், சென்னிநத்தம் என்ற பகுதியில் ஒரு நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. இந்த நியாய விலைக் கடையிலிருந்து சுமார் 820 குடும்ப அட்டைதாரர்கள் பொருட்கள் பெற்று பயனடைந்து வருகின்றார்கள். அந்தக் கடை பழைய பழுதடைந்த ஓட்டு வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இடம் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆபத்தான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் அந்த விற்பனையாளர்கள் சிறிய கொட்டகை அமைத்து வெளியிலே அமர்ந்து அந்தப் பொருட்களை வைத்து விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கி செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்கள். எல்லா கடைகளுக்கும் எங்களால் கொடுக்க முடியாது. எனவே, புவனகிரி சட்டமன்றத் தொகுதியில் அதேபோல் ஏராளமான பழுதடைந்த கட்டடங்கள் இருக்கின்றன. பழுதடைந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் புதிய கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குண்டைத் தூக்கிப் போடுகிறார். அதாவது நியாய விலைக் கடைகளில் கொட்டகை அமைத்து பொருட்களைக் கொடுத்ததாக எங்கேயும் தகவல் கிடையாது. பொதுவாக, பழுதடைந்த கட்டடமாக இருந்தால் பழுது பார்த்து, அதைச் சரி செய்வதற்கு இப்போது துறைரீதியாக ஒவ்வொரு சங்கத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூபாய் 50 ஆயிரம் நிதி கொடுத்திருக்கிறோம். அதாவது மழைத் தண்ணீர் வரக் கூடாது, மற்ற எந்தவித பாதிப்பும் இருக்கக் கூடாது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தரமான பொருட்களை வழங்குகிறது. மக்கள் அதை வாங்கிச் செல்ல வேண்டும். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல கொட்டகை அமைத்து பொருட்களை வழங்குகிறார்கள் என்பதெல்லாம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான விஷயத்தை அவையில் பதிவு செய்யக் கூடாது. ஏனென்றால், அவைக் குறிப்பில் பதிவாகும் அல்லவா? அந்த மாதிரியெல்லாம் பேசக் கூடாது. அதுபோன்ற நிலையே இல்லை. அதாவது, 'நிதி ஒதுக்குவதில் பிரச்சினை இருக்கிறது; நான் இந்த மாதிரியெல்லாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தக் கடைக்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறேன், இந்தக் கடைக்கு கொடுக்க முடியாது' என்று சொன்னீர்கள் என்றால் பரவாயில்லை. அப்படி அவையில் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு கொட்டகை அமைத்து பொருட்களை விற்கிறார்கள் என்று சொன்னால், அது தவறான தகவல். அந்த மாதிரி நிலை எங்கேயும் இல்லை. தமிழகத்தில் 32 ஆயிரத்து 291 கடைகளை நடத்துகிறோம், எந்தக் கடைகளிலும் இந்த மாதிரி நிலை இல்லை. அதேநேரத்தில் அரசாங்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகச் செய்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி, ஏதாவது சிறப்பு நிதி பெற்று, நாடாளுமன்ற உறுப்பினருடைய சிறப்பு நிதி பெற்று இந்தக் கடை கட்டிக் கொடுக்கப்படும். நீங்கள் சொல்வதுபோல் இருந்ததென்றால், உறுதியாக அந்தக் கடையையும் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும். நீங்களும் ஆவன செய்யுங்கள் என்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.*

2019 ஜூலை 5]

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை தொகுதி, அம்மூர் பேரூராட்சியில், 2–வது வார்டு, அல்லிகுளம் கிராமத்தில் நியாய விலைக் கடை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே ஏறத்தாழ 564 கார்டுகள் இருக்கின்றன. அதே ஊராட்சியில் 1–வது வார்டு, நரசிங்கபுரம் கிராமத்தில் 236 கார்டுகள் இருக்கின்றன. அல்லிகுளம் ஊராட்சியிலிருந்து, நரசிங்கபுரம் கிராமம் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. அவர்கள் 5 வருடமாக பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். நான்கு வருடங்களுக்கு முன்னால் அதிகாரிகள், 'நீங்கள் அங்கு ஏதாவது கட்டடம் இருந்தால் சொல்லுங்கள், நாங்கள் அதைச் செய்து கொடுக்கிறோம்' என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அங்குள்ள பொது மக்கள் ஒட்டுமொத்தமாக நிதி திரட்டி, கடைக்கான கட்டடம் கட்டி அதற்குத் தேவையான எடை இயந்திரம், மேசை, நாற்காலி, ஃபேன் போன்ற எல்லாவற்றையும் அமைத்தும் அந்தக் கட்டடம் 4 வருடங்களாக மூடி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பற்றி எனக்குத் தெரியும். சாதனை மன்னர் அவர். எது சொன்னாலும் உடனே செய்வார். அந்த நம்பிக்கை எனக்கு உண்டு. அதேபோல,* Joint Registrar *அவர்கள்* Registrar *அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். கடித எண்* 336/2019–ல் recommend *செய்து அனுப்பியிருக்கிறார் என்று நினைக்கிறேன். தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மக்கள் கஷ்டத்தை உணர்ந்து உடனடியாக அதை நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்று உங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு இதுமாதிரி திறக்காமல் இருப்பதற்கு நிச்சயமாக துறைரீதியாக அதில் தவறு ஏதுமில்லை. அந்தப் பகுதியினுடைய வருவாய்த் துறை மற்றும் உள்ளாட்சித் துறையில் ஏதாவது பிரச்சினை இருக்கும் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு ஏதாவது காரணம் சொல்லி இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போன்று அதில் ஏதாவது தவறு இருக்கும்பட்சத்தில் அதை துறை ரீதியாக*

ஆய்வு செய்து உடனடியாக கடையைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வளவு தூரம் வசதிகளெல்லாம் செய்த பிறகு அந்த ஊர் மக்கள் விரும்புகிற இடத்திலேதான் கடை நடைபெற வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணமும், அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணமும் இதுதான். பொருட்கள் வாங்குகிற ஊர் மக்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக அந்தக் கடையை விரும்புகிறார்களென்றால், அங்கு இடர்பாடுகள் இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக அவற்றைக் களைந்து, அந்தக் கடையை உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களை வைத்து திறப்பதற்கு, அதிகாரிகளுக்கு ஆலோசனை சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அண்ணன் எடப்பாடியார் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து அவர்கள்.*

திரு. கோ. சம்பத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழகத்தின் வணக்கத்திற்குரிய மாண்புமிகு முதலமைச்சர், கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர், கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் அவர்களையும் வணங்குகிறேன்.*

சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட பாண்டியநல்லூர் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட கல்பட்டு கிராமத்தில் கிட்டத்தட்ட 350 குடும்ப அட்டைகள் உள்ளன. இதற்கு ஒரு நிரந்தரக் கூட்டுறவு நியாய விலைக் கடையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிவிக்கக் கோருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 370 கார்டுகள் உள்ள அந்த இடத்திற்கு புதிதாக நியாய விலைக் கடை வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். பொதுவாக, அரசு விதிப்படி 500 கார்டுகள் இருக்க வேண்டும். எதனால் அங்கு 370 கார்டுகள் இருக்கின்றன என்று தெளிவாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்*

2019 ஜூலை 5]

*சுட்டிக்காட்டவில்லை. தற்போது எந்தக் கடையில் அந்த மக்கள் அத்தியாவசியப் பொருட்கள் வாங்குகிறார்கள், எப்படி வாங்கிச் செல்கிறார்கள், ஏன் 370 கார்டுகள் உள்ள அந்த ஊரில் மக்களுக்கு புதிதாகக் கடை கட்ட வேண்டும், அது பகுதிநேரக் கடையா, முழுநேரக் கடையா என்பதை தெளிவில்லாமல் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அது பகுதிநேரக் கடையாக இருக்கும்பட்சத்தில், அங்கு அரசு கட்டடங்கள் இருக்கும்பட்சத்தில், உள்ளாட்சித் துறையின் நிருவாகத்தின்கீழ் இருக்கிற கட்டடங்களில் அந்தப் பொருட்களை வைத்து, அந்தக் கடை நடத்தப்பட வேண்டுமென்று கூட்டுறவுச் சட்ட விதிகளின்படி உள்ளது. இல்லாதபட்சத்தில், நிறைய உறுப்பினர்கள் தனியார் இடங்களில் கேட்கிறார்கள். தனியார் இடத்தில் பகுதிநேரக் கடைகளை அமைத்தால் சில பிரச்சினைகள் உருவாகும். அங்கு சில பேர் பொருட்களை வாங்க மாட்டேன் என்கிறார்கள், ஊருக்குள் பிரச்சினை இருக்கிறது, ஒருவருக்கொருவர் பிடிக்காமல் இருக்கலாம், அரசியல் கருத்துகள் மாறுபாடெல்லாம் இருக்கின்றன. இதற்காகத்தான் அரசுத் துறை இடங்களில் அமைக்கப்படுகின்றன. இரண்டாவதாக, அங்கே அந்தப் பொருட்கள் வைக்கப்படும்போது தவறுகள்–*misoperation *நடப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதுபோன்று அரசு இடங்களில் உள்ளாட்சி நிருவாகத்தின்கீழ் உள்ள இடங்களில் அமைத்தால் இந்தத் தவறுகள் நடப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தனியாரிடத்தில் இருக்கும்போது இந்தப் பகுதிநேரக் கடையில் தவறுகள்–*misoperation *நடப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. எனவேதான் பகுதிநேரக் கடைகளை அமைக்கும்போது அரசு கட்டடங்களில் இருக்க வேண்டும்; அரசு கட்டடங்களில் இருந்தால் நல்லது என்று சொல்வதற்கு இதுதான் முக்கியக் காரணம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை துறை ரீதியாக ஆய்வு செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கேட்ட கேள்விதான்.*

திருக்கோவிலூர் தொகுதியில் ஆயந்தூர் என்ற கிராமத்தில் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு கிட்டத்தட்ட 7 ஆண்டுகளாகத் திறக்கப்படாமலே இருக்கிறது. Collector*–இடம் பேசுகிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நேரிலே சொன்னார். அந்த ஊரில் பிரச்சினை இருப்பதால் இன்னும் திறக்காமல் இருப்பதாகச் சொன்னார்கள். அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு, கடையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் 7 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. இந்தக் கட்டடம் திறக்கப்பட்டால் நமக்கு வாடகையும் மிச்சம். அந்த இடத்தில் திறந்தால் நன்றாக இருக்கும். அந்த ஊரில் வெவ்வேறு பிரச்சினைகள் இருக்கலாம்.* Communal, caste *பிரச்சினைகள் இருந்தாலும்கூட, அந்த ஊர்கள் அருகில்தான் இருக்கின்றன. எந்தவிதமான பிரச்சினைகளும் கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு அந்தப் புதிய கடையைத் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்புகூட, அண்ணன் முனைவர் பொன்முடி அவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து கேட்டிருந்தார். ஏற்கெனவே நான்கூட சொல்லியிருந்தேன். (குறுக்கீடு) கேட்டது வேறு. இப்போதும் கொடுத்திருக்கிறீர்கள். பொதுவாக, தமிழகத்தில் மொத்தமே 4 கடைகளுக்கான கட்டடங்கள்தான் திறக்கப்படாமல் இருக்கின்றன. அதில் அண்ணன் முனைவர் பொன்முடி அவர்கள் சொல்கின்ற இடமும் ஒன்றாகும். பொதுவாகவே, இதுபோன்ற கடைகள் அந்தப் பகுதி மக்களுடைய ஒப்புதலைப்பெற்று கட்டப்படுகின்றன. பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களிடம் நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நாம் நிதி கொடுக்கின்றோம். அந்தத் தொகுதி மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையிலான இடங்களில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாகக் கட்டப்படும் கடைகளாக இருக்கும்பட்சத்தில், உண்மையிலேயே எல்லோரும் அங்கு வந்து பொருட்களை வாங்கிச் செல்வதற்கு வாய்ப்பாக

2019 ஜூலை 5]

இருக்கும். பொதுப் பணித் துறையின் நீர்ப் பிடிப்புப் பகுதி, கட்டடங்கள் அமைவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத பகுதி, மின் வசதி இல்லாத இடங்கள் என இதுபோன்று சில இடங்களில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் பொன்முடி அவர்கள் சொல்லும் அந்த இடமானது பிரச்சினைக்குள்ளதாகவே இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் எங்களுடைய துறை சார்ந்த மண்டல இயக்குநர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். எனவே, இந்த முறை அதனுடைய பிரச்சினை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் சொல்லி, அவரும் உதவி செய்யும்பட்சத்தில் அந்தக் கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அந்த ஊர் மக்கள் எல்லோரும் சென்று பொருட்களை வாங்கினால்தான் பயனுள்ளதாக இருக்கும். ஒருவருக்கொருவர் பிரச்சினை ஏற்பட்டால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்தக் கடைகளை அமைப்பதில் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகளெல்லாம் வந்து விடுகின்றன. அதுபோன்று இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் 46 நகரும் நியாய விலைக் கடைகளைக்கூட கொண்டுவந்தார்கள்.

இன்னொரு சட்டத்தையும் நீங்கள் உங்களுடைய ஆட்சியில் கொண்டு வந்திருக்கிறீர்கள். எங்கெங்கு பதற்றம், சட்டம்–ஒழுங்கு பிரச்சினை இருக்குமோ அங்கே இரண்டு கடைகளாகக்கூட கட்டிக்கொள்ளலாம். இடங்கள், ஊர், அந்தக் கடைகள் எல்லாம் விதி விலக்கு, அந்தக் கடைகளுக்கு விதி விலக்குக் கொடுத்து கட்டலாம் என்று நீங்களே சட்டமும் போட்டிருக்கிறீர்கள். எங்களுடைய அரசு அதைப் பயன்படுத்தி வருகிறது. எனவே, நாங்களும் என்ன சொல்கிறோம் என்றால், உண்மையில் அந்தக் கட்டடத்தைத் திறக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீங்களே அந்த ஊரில் இருக்கின்ற பிரச்சினையைக் களைந்து, நீங்களே அதைச் சரி செய்து கொடுங்கள். எங்கள் துறை அலுவலரையே உங்களிடம் நேரடியாக அனுப்புகிறேன். நீங்களே முயற்சி எடுத்து, அதைச் செய்து கொடுங்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நல்லவர்தான். அதைச் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் மொத்தமே 4 கடைகள்தான் இதுபோன்று திறக்கப்படாமல் இருக்கின்றன. வேறு எங்கேயும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு*